நிந்தவூர் பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 04 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்ளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து நிந்தவூர் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் பழைய அலுவலகக் கட்டிடம் 2015 மார்ச் 01 ஆம் திகதி முதல் சுகாதார இராஜாங்க அமைச்சரின் பிராந்திய அலுவலகத்திற்காக ரூபா 15,000 மாத வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தும், மீளாய்வாண்டின் இறுதி வரை நிலுவையாக உள்ள 39 மாதங்களுக்கான வாடகை ரூபா 585,000 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டின் இறுதிவரை சபையின் JCB வாகனத்தை வெளிக்கள வேலைக்காக தனிநபர்களுக்கு வாடகைக்கு வழங்கியதன் மூலம் பெறவேண்டிய ரூபா 530,820 வாடகைத் தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வீதிகள் புனரனமைப்புக்காக பெறப்பட்ட ரூபா 6,065,258 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டி ருக்கவில்லை.

1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வேலையைவிட்டு நீங்கிய 24 ஊழியர்களுக்கு பிரதேச சபையினால் வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை ரூபா 104,918 தொகை 10 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) தெரு விளக்கு மின்பாவனை தொடர்பாக இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய மின்சார பாவனைக் கட்டணம் ரூபா 2,951,150 மற்றும் இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்படவேண்டிய வருமதிகள் ரூபா 2,477,322 என்பவற்றை செலுத்துவதற்கும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாது 22 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | தொகை | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் | - | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காக நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி, தொழில்நுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | - | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், மூன்று வருடங்களுக்கு மேலாக அவர்களிடமிருந்து பாதுகாப்புப் பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 1,541,743 | மூன்று வகையான 57 வைப்புகள் இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்களாக காணப்பட்ட போதிலும் சபை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் வருமானமனத்திலும் கூடிய செலவீனம் ரூபா 396,368 ஆகும். இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 8,731,248 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 9,127,616 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், அறவிடப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) வீதவரிகளும் வரிகளும் | 6,250 | 4,424 | 3,377 | 3,338 | 6,250 | 4,300 | 3,749 | 2,291 |
| (ii) வாடகை | 5,125 | 3,070 | 3,039 | 3,275 | 5,125 | 7,585 | 7,542 | 3,244 |
| (iii) உரிமைக் கட்டணம் | 1,525 | 649 | 649 | - | 1,525 | 957 | 957 | - |
| (iv) ஏனைய வருமானம் | 8,500 | 7,605 | 7,277 | 3,178 | 8,500 | 8,501 | 8,128 | 2,850 |

2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 24,133,219 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 14,341,938 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 59% ஆக காணப்பட்டிருந்தது.

2.2.3 இறைச்சிக் கடைக் குத்தகை அறவீடு

1980 முதல் 2012 ஆம் ஆண்டு இறுதி வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகை ரூபா 3,173,466 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (SDG)

2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபையில் முன்னலுவலகம் ஸ்தாபிக்கப்பதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் சபை என்பவற்றினால் ரூபா.300,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் 2018 செப்டம்பர் 10 ஆம் திகதிவரை முன்னலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் இதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட 02 கணனிகள் பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

(ஆ) நிந்தவூர் பொதுச் சந்தையில் 27 கடைகளும் திறந்த மீன் சந்தை ஒன்றும் அமைப்பட்டுள்ள நிலையில் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக 14 கடைகளும் திறந்த மீன் சந்தையும் பாவனையின்றி உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) பொதுச்சந்தையில் 06 கடைகளை வாடகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகையாளர்களிடமிருந்து வாடகை ரூபா 215,000 அறவிடப்படாமலும் அக்கடைகளிற்கான மின்சாரக் கட்டணம் ரூபா 106,899 தொகை நிலுவையாகவுள்ளது. இருப்பினும், சபையினால் குத்தகையாளர்களிடம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 ஆளணி முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் அமைய, தற்காலிக அடிப்படையில் கடமையாற்றியதற்கமைய ஆளணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் சபைக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட வேலைத் தொழிலாளி 2014 ஒக்டோபர் 24 ஆம் திகதி முதல் இன்று வரை அம்பாரை பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் பணியாற்றிவருவதுடன் அவ்வூழியரின் சுயவிபரக் கோவை மாத்திரம் சபையில் பேணப்பட்டு வருவதுடன் அவ்வூழியரின் வரவுகளை உறுதிப்படுத்தாது சபையினால் 46 மாதங்களுக்கு மேலாக சம்பளங்களும் சம்பள ஏற்றங்களும் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) பிரதேச சபையினால் பட்டியலிடப்படாத பதவிகளுக்காக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் பதில், அமைய, ஒப்பந்த மற்றும் தற்காலிக அடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் 14 ஊழியர்கள் சுகாதார மற்றும் வேலைத் தொழிலாளர்களாக 06 மாத காலத்திற்கு நியமிக்கப்பட்டு குறித்த காலம் நிறைவடைந்தும் 02 வருடங்களிற்து மேல் அனுமதி பெறப்படாது சபையில் பணியாற்றிவருகின்றனர்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் பழைய அலுவலகக் கட்டிடம் 2015 யூன் 30 ஆம் திகதி முதல் சுகாதார இராஜாங்க அமைச்சரின் பிராந்திய அலுவலகத்திற்காக ரூபா 15,000 மாத வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தும், மீளாய்வாண்டின் இறுதி வரையான 39 மாத வாடகை நிலுவை ரூபா 585,000 தொகையும் மின்சாரக் கட்டண நிலுவை ரூபா 8,302 தொகையும் உரிய அமைச்சிடமிருந்து இன்று வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை சபையின் JCB வாகனத்தை வெளிக்கள வேலைக்காக தனிநபர்களுக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலம் பெறவேண்டிய ரூபா 530,820 வாடகைத் தொகையை அறவிடுவதற்கு அல்லது உரிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 299,965 பெறுமதியான 35,290 குப்பை சேகரிக்கும் பைகளில் 33,800 பைகள் களஞ்சியத்தில் குறித்த தேவைக்கு பயன்படுத்தப்படாது 2018 செப்தெம்பர் 06 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் காணப்பட்டன.

(ஈ) 2016 ஆம் ஆண்டு பிரதேச சபைகளை வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் சபையினால் சிறுவர் பூங்காவிற்கும் வாகனத் தரிப்பிடத்திற்கும் புற்தரைகளை இடுதல் வேலை பூர்த்திசெய்யப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட்டு அதற்காக ரூபா 144,300 தொகை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், குறித்த வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் இவ்வேலை தொடர்பாக தொழிலாளர் கூலியாக ரூபா 18,900 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம் | திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல் |